பள்ளிக்குச் செல்ல ஆயத்தமாகும் சிறுவர்கள்

▶ கோடை விடுமுறை முடிந்து வரும் 10-ம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலையில், சென்னை பாண்டி பஜாரில் உள்ள துணிக்கடையில் குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடையை வாங்கும் பெற்றோர். அடுத்த படம் : பள்ளி செல்வதற்கான புத்தகப்பை, டிபன் பாக்ஸ், தண்ணீர் பாட்டில்களை தனது பெற்றோருடன் சென்று வாங்கும் சிறுவர்கள்.

சென்னையில் உள்ள 3 மக்களவை தொகுதி வாக்கு எண்ணிக்கைக்காக

தலா 2 பொது பார்வையாளர்கள் நியமனம்

சென்னை, ஜூன் 3: சென்னை மாவட்டத்தில் உள்ள 3 மக்களவை தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கைக்காக தலா 2 பொது பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தொடர்புக்கான செல்போன் எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 39 மக்களவை தொகுதிக்கான வாக்குப்பதிவு கடந்த ஏப்ரல் மாதம் 19ம் தேதி ஒரே கட்டமாக நடந்தது. 39 தொகுதிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது. சென்னையை பொறுத்தவரை வடசென்னை தொகுதியில் பதிவான வாக்குகள் ராணி மேரி கல்லூரியிலும், தென் சென்னை தொகுதிக்கான வாக்குகள் அண்ணா பல்கலைக்கழகத்திலும், மத்திய சென்னை தொகுதிக்கான வாக்குகள் லயோலா கல்லூரியிலும் எண்ணப்படுகிறது. நாளை (செவ்வாய்கிழமை) வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு சென்னை மாவட்டத்திற்குட்பட்ட தென் சென்னை, மத்திய சென்னை மற்றும் வட சென்னை நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கைக்கான பொது பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சென்னைக்கு வருகை தந்துள்ளனர்.

தொடர்புக்கான செல்போன் எண்களும் அறிவிப்பு

வாக்கு எண்ணும் பணிகளை பார்வையிட வாக்கு எண்ணிக்கைக்கான பொது பார்வையாளர்கள் வட சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவொற்றியூர், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் மற்றும் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஐஏஎஸ் அதிகாரி கார்த்திகேதன்ஜி புத்தப்பாட்டி நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் கைபேசி எண். 94459 10953. பெரம்பூர், கொளத்தூர் மற்றும் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு ராஜேஷ் குமார், எஸ்.சி.எஸ்.,(கைபேசி எண். 94459 10932) நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம், எழும்பூர் மற்றும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதிகளுக்கு திரு. ஜிதேந்திரா ககுஸ்தே, எஸ்.சி.எஸ்.,(கைபேசி எண். 94459 10940), சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஐஏஎஸ் அதிகாரி டாக்டர் டி.சுரேஷ்,(கைபேசி எண்.94459 10956) நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட விருகம்பாக்கம், சைதாப்பேட்டை மற்றும் தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஐஏஎஸ் அதிகாரி முத்தாடா ரவிச்சந்திரா (கைபேசி எண்.94459 10957), மயிலாப்பூர், வேளச்சேரி மற்றும் சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு முகமது சஃபிக் சக், எஸ்.சி.எஸ்.,(கைபேசி எண்.94459 10945) நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பார்வையாளர் பணி ஒருங்கிணைக்க நோடல் அதிகாரிகள் 2 பேர் நியமனம்

நாடாளுமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகிறது. வாக்கு எண்ணிக்கைக்காக தமிழகத்திற்கு நியமனம் செய்யப்பட்ட பார்வையாளர்கள் தொடர்பான பணிகளை ஒருங்கிணைக்க 2 நோடல் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதாவது கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் ஆனி ஜோசப், பொதுத் துறை செயலாளர் நந்தக்குமார் ஆகியோர் நோடல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் பார்வையாளர்கள் தொடர்பான பணிகளை ஒருங்கிணைப்பாளர்கள் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

காற்று வாங்க போனோம்...

▶ மக்கள் தொகை நெருக்கம் கொண்ட பெருநகரமான சென்னையில் ஏழை முதல் செல்வந்தர் வரை அனைவரும் அதிக செலவில்லாமல் சென்று வரக் கூடிய இடம் மெரினா கடற்கரை. சென்னையில் நேற்றும் கோடை வெப்பம் தகித்ததால் காற்று வாங்குவதற்கும், பொழுது போக்குவதற்கும் மெரினா கடற்கரையில் மாலை வேளையில் குவிந்த பெருங்கூட்டம்.

ஏஐ மற்றும் டேட்டா சயின்ஸில்

பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு குறுகிய கால சான்றிதழ் படிப்பு

சென்னை, ஜூன் 3: ஏஐ மற்றும் டேட்டா சயின்ஸ் படிப்புகளில் மாணவர்களின் திறனை ஏற்படுத்த பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு குறுகிய கால சான்றிதழ் படிப்புகளை ஏ.ஐ.சி.டி.இ வழங்க இருக்கிறது.

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலானது (ஏ.ஐ.சி.டி.இ), முக்கிய பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு செயற்கை நுண்ணறிவு (ஏஐ), தரவு அறிவியல் (டேட்டா சயின்ஸ்) போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்ப தர மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் பயிற்சி அளிக்க குறுகிய கால படிப்புகளை கொண்டு வந்துள்ளது. ஏஐ மற்றும் டேட்டா சயின்ஸ் ஆகிய படிப்புகள் இந்த ஆண்டு தமிழகக் கல்லூரிகளில் அதிகம் விரும்பப்படும் பாடமாக இருக்கிறது. தமிழகத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் மூலம் பல சான்றிதழ் படிப்புகள் நடத்தப்படுகின்றன. தற்போது ஏஐ போன்றவற்றின் தேவை அதிகரித்து வருவதால், ஏஐ மற்றும் தரவு அறிவியல் பகுப்பாய்வு குறித்த கூடுதல் படிப்புகளை நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த கல்வியாண்டில் அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் கல்லூரிகளுக்கு 25 ஆயிரம் இடங்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன. ஏஐ, டேட்டா சயின்ஸ், ரோபோட்டிக்ஸ், இன்டெர்நெட் ஆப் திங்க்ஸ், சைபர்-பிசிகல் சிஸ்டம், விர்ச்சுவல் ரியாலிட்டி, மெஷின் லேர்னிங்க் போன்ற பாடங்களுக்கு குறைந்தபட்சம் ஐந்து வருட அனுபவமுள்ள மெக்கானிக்கல், சிவில், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் துறைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். ஐஐடி வழங்கும் இந்த ஹைபிரிட் பாடங்கள் ஆறு மாதங்களில் இலவசமாக கற்பிக்கப்பட உள்ளன. இதற்கு ஜூன் 6க்குள் விண்ணப்பிக்க வேண்டும். சான்றிதழ் வழங்கும் திட்டத்திற்கு பிறகு கோர் இன்ஜினியரிங் ஆசிரியர்களை, ஏஐ ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ளுமாறு பல கல்லூரி நிர்வாகங்கள் அண்ணா பல்கலைக்கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. மேலும் தங்கள் ஆசிரியர்களை மேம்படுத்துவது முதல் தொழில்துறை நிபுணர்களை பணியமர்த்துவது என கல்லூரி நிர்வாகங்கள் பல்வேறு வழிகளில் முயற்சிகளை செய்து வருகின்றனர்.

பாதை அமைத்தீர்கள்; பயணத்தை... முதல் பக்க தொடர்ச்சி

- மறுமலர்ச்சிகள் - புத்தாக்கங்கள் - நிறுவனங்கள் - பள்ளிகள் - கல்லூரிகள் - மருத்துவக் கல்லூரிகள் - பல்கலைக்கழகங்கள் என பலதும் கலைஞரால் உருவாக்கப்பட்டவை. அவர் துளி மையால் விளைந்தவை.

வியர்வை சிந்தி இந்த இனத்துக்காக உழைத்தார். ஒரு துளி மையில் இந்த மாநிலத்தை வளர்த்தார். அதனால்தான் நிறைவாழ்க்கைக்குப் பிறகும் நினைவுகூரப்படுகிறார்.

புகழால் அல்ல - செயலால் மறக்கமுடியாத தலைவர் அவர். அதிகாரத்தால் அல்ல - அன்பால் போற்றப்படும் தலைவர் அவர். 'அன்பார்ந்த ....' என்று சொல்லத் தொடங்கியதும் லட்சக்கணக்கான தொண்டர்களின் உடலில் மின்சாரம் பாய்கிறது என்றால்.... 'என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே' என்று விளிக்கும் போது உடல் முழுவதும் ரத்தமாற்றம் நடக்கிறது என்றால்... அவர் அஞ்சுகத்தாயின் மைந்தன் மட்டுமல்ல தமிழ்த்தாயின் புதல்வன் அல்லவா?

95 ஆண்டுகள் தமிழ் நாட்டை காலால் அளந்தவர். தோளால் சுமந்தவர். இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக மாற்றியவர். தமிழ்நாட்டின் எந்த ஊருக்குச் சென்றாலும் அவர் கல்வெட்டு இல்லாத ஊர் இல்லை. அவர் சொல் வெட்டு கேட்காத மனிதரில்லை. அவர் சொற்செட்டு படிக்காத ஆளில்லை. எல்லாரையும் ஈர்த்த எல்லார்க்குமான தலைவர் அவர்.

தமிழ்நாட்டின் நம்பிக்கைத் தீபமான அவருக்கு, நமது நன்றியின் அடையாளமாக மதுரையில் நூலகம் அமைத்தோம். சென்னையில் பல்நோக்கு மருத்துவமனை கட்டினோம். திருவாரூரில் கோட்டம் கண்டோம். அலங்காநல்லூரில் ஏறுதழுவுதல் அரங்கம் உருவாக்கினோம். சென்னையின் நுழைவாயிலில் பேருந்து முனையம் கட்டினோம். வங்கக் கடலோரம் வாஞ்சைமிகு தென்றலின் தாலாட்டில் ஓய்வெடுத்து வரும் தலைவருக்கு உலகமே வியந்து பார்க்கும் நினைவகம் நிலைநாட்டினோம். இவை அனைத்துக்கும் மேலாக திராவிட மாடல் ஆட்சியை கலைஞரின் புகழுக்கே காணிக்கை ஆக்கினோம்.

கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளுக்கு இணையாக இந்த இருபதாம் நூற்றாண்டில் யாருமில்லை என்று நிரூபிக்கும் வகையில், சொல்லால்-செயலால்-உழைப்பால்-உண்மையால் - செயல்பட்டு வரும் எங்களுக்கு உங்களது வாழ்த்துகள் வேண்டும் தலைவரே.

உங்கள் வாழ்த்துதான் எங்களை உற்சாகமாக உழைக்கச் செய்யும். அந்த உழைப்பு தாய்த்தமிழ் நாட்டை வளர்த்தெடுக்கும். முன்பொரு நாள் நீங்கள் எழுதினீர்கள்... "என் மகனே, நீயும் தோளில் பலம் உள்ளவரையில் பகையைச் சாடு, பரணி பாடு, இது உன் தாய்த்திருநாடு - என்று எழுதினீர்கள். அப்படித்தான் என்னையும் இந்த நாட்டுக்காக ஒப்படைத்து உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

பெரியாரின் பிள்ளைகள் நாம் பேரறிஞர் தம்பிகள் நாம் - என்றும் பிரியாத இருவண்ணக் கொடியே நாம் -என்றீர்கள். அப்படித்தான் நாங்களும் செயல்பட்டு வருகிறோம். தலைவர் கலைஞரே! நீங்கள் இருந்து செய்ய வேண்டியதை, உங்கள் மகனாக நான் செய்து வருகிறேன்.

- நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் நீங்கள்.. எதிர்கொண்ட எல்லா தேர்தல்களிலும் நாங்களும் வென்று காட்டி இருக்கிறோம்.
- நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி நீங்கள்.. அந்த நவீன தமிழ்நாட்டை உன்னதத் தமிழ்நாடாக உயர்த்திக் காட்டி வருகிறோம் நாங்கள்.
- இந்தியாவின் திசையைத் தீர்மானித்தவர் நீங்கள்.. இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் திரும்பிப் பார்க்கும் திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறோம் நாங்கள்.
- உலகுக்கு தமிழ்நாடு வழிகாட்ட வேண்டும் என்று சொன்னீர்கள் நீங்கள்.. உலக நாடுகளோடு போட்டிபோடும் அளவுக்கு தொழில் வளர்ச்சியைக் கண்டு வருகிறோம் நாங்கள்.
- மகளிர் மனங்களில் மகிழ்ச்சியின் விளையாட்டு.. மாணவ மாணவியர் உள்ளங்களில் உணர்ச்சியின் தாலாட்டு... விவசாயிகளின் எண்ணங்களில் பசுமையின் நீராட்டு .... மொத்தத்தில் தமிழ்நாட்டில் வளர்ச்சியின் புகழ்ப்பாட்டு... - இதுதானே நீங்கள் கனவு கண்ட கம்பீரத் தமிழ்நாடு. அதை நாங்கள் உருவாக்கிக் காட்டி வருகிறோம்.
- தலைவரே நீங்கள் நினைத்தீர்கள். நாங்கள் செய்து காட்டி வருகிறோம்.
- நீங்கள் பாதை அமைத்தீர்கள். நாங்கள் பயணத்தைத் தொடர்கிறோம்.
- நீங்கள் இயக்குகிறீர்கள். நாங்கள் நடக்கிறோம்.
- உங்கள் பெயரைக் காக்கவே எந்நாளும் உழைக்கிறோம். உழைப்போம், உழைப்போம்.

இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

101வது பிறந்தநாளை முன்னிட்டு

கலைஞர் நினைவிடத்தில் இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை

தமிழகம் முழுவதும் திமுக சார்பில் நலத்திட்ட உதவிகளுக்கு ஏற்பாடு

சென்னை, ஜூன் 3: கலைஞரின் 101வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. கலைஞரின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காலை மலர் மாலை வைத்து மரியாதை செலுத்துகிறார். தமிழகம் முழுவதும் திமுக சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மறைந்த முதல்வரும், திமுக தலைவருமான கலைஞரின் 101வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கலைஞரின் பிறந்தநாளை தமிழகம் முழுவதும் திமுகவினர் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது வழக்கம். அதேபோல் திமுக முன்னோடிகள் கவுரவிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் கலைஞரின் 101வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. கலைஞரின் பிறந்தநாளான இன்று காலை 9 மணியளவில் திமுக தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கலைஞர் நினைவிடத்தில் மரியாதை செலுத்துகிறார். தொடர்ந்து 9.15 மணியளவில் அண்ணா நினைவிடத்தில் அவர் மரியாதை செலுத்துகிறார். அதன் பிறகு காலை 9.30 மணியளவில் சென்னை அண்ணாசாலை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள கலைஞர் திருவுருச்சிலைக்கு அவர் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்துகிறார். தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள முரசொலி வளாகத்தில் உள்ள கலைஞர் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். அதன் பிறகு சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள கலைஞரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்.

மேலும் சென்னை கோபாலபுரத்தில் உள்ள கலைஞரின் இல்லத்தில் உள்ள கலைஞரின் திருவுருவ படத்திற்கும் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்த உள்ளார். மேலும் சி.ஐ.டி. காலனியில் உள்ள இல்லத்திலும் கலைஞரின் திருவுருவப் படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்துகிறார். தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கட்சியினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு நாளை திமுக கிளை கழகங்கள் தொடங்கி, அனைத்து அமைப்புகளின் சார்பிலும் கலைஞரின் திருவுருவப் படத்தினை வைத்து, கட்சித்தோழர்கள் அனைவரும் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்திட, மாவட்ட-மாநகர-ஒன்றிய-நகர-பகுதி-பேரூர்-வட்ட-கிளைக் கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். மேலும் தமிழகம் முழுவதும் திமுக மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி தி.மு.க. சார்பில் பொதுக் கூட்டங்கள், நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள், விளையாட்டு போட்டிகள் என தொடர் நிகழ்ச்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை நாளில்

ரொம்ப உஷாராக இருங்க...

முகவர்களுக்கு செல்வப்பெருந்தகை அறிவுறுத்தல்

சென்னை, ஜூன் 3: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை நேற்று வெளியிட்ட அறிக்கை:

2024 மக்களவை தேர்தல் 7 கட்டங்களாக நடந்து முடிந்து ஜூன் 4 அன்று காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்க இருக்கிறது. வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறபோது முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட வேண்டும். தபால் வாக்குகள் எண்ணி முடிந்த பிறகுதான் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலமாக வாக்கு எண்ணிக்கை தொடங்கப்பட வேண்டும். தபால் வாக்குகள் எண்ணிக்கையை எந்த காரணம் கொண்டும் தாமதப்படுத்தாமல் விரைவாக எண்ணி அதனுடைய முடிவுகளை உறுதி செய்ய வேண்டும்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் விவிபேட்-ஐ எண்ணுவதற்கு முன்பாக இயந்திரங்களில் இருக்கும் சீல்கள் சரியாக இருக்கிறதா என்பதை வாக்கு எண்ணிக்கை முகவர்கள் உறுதி செய்துக்கொள்ள வேண்டும். அதை தொடர்ந்து படிவம் 17 சி-இல் இருப்பதை ஒப்பிட்டுப் பார்த்து உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். 17 சி படிவத்தில் உள்ள பதிவான வாக்குகள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் ஒத்துப் போகிறதா என்பதை ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும். எந்த வாக்குப்பதிவு இயந்திரத்திலாவது சீல்கள் சேதமடைந்திருந்தாலோ, இயந்திரத்தின் எண் ஒத்துப்போகவில்லை என்றாலோ அந்த இயந்திரத்தை அனுமதிக்காமல் தனியாக ஒதுக்கி வைக்க வேண்டும். வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறபோது இதுகுறித்த தேர்தல் ஆணைய கையேடுகளையும், அதற்குரிய சட்ட புத்தகங்களையும் எடுத்துச் செல்வதோடு அதுபற்றிய முழு விபரங்களை அறிந்துகொள்ள வேண்டும். எனவே வாக்கு எண்ணும் மையங்களுக்கு காலை 6 மணிக்கெல்லாம் சென்று எந்த விதமான தவறுகளும் நடக்க வாய்ப்பளிக்காமல் முகவர்கள் மிகுந்த கவனத்தோடு செயல்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் 39 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 39 மையங்களில் 43 கட்டிடங்களில் உள்ள 234 அறைகளில் நடைபெறுகிறது. ஒரு வாக்கு எண்ணிக்கை அறையில் 16 க்கும் மேற்பட்ட மேஜைகள் போடப்பட்டிருக்கும். ஒவ்வொரு சட்டமன்றத்திற்கும் மேஜைகள் தனியாக போடப்பட்டு வாக்கு எண்ணிக்கை நடைபெறும். அப்படி வாக்குகள் எண்ணப்படுகிற மேஜையில் துணை தேர்தல் அதிகாரியோடு வேட்பாளர்களின் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அமருவதற்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை எந்த நிலையிலும் விட்டுக்கொடுக்கக் கூடாது. மிகுந்த விழிப்புணர்வோடு காலை 6 மணி முதல் வாக்கு எண்ணிக்கை நிறைவடைகிற வரை வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலத்தில் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட காங்கிரஸ் வெற்றி வேட்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ICICI Home Finance

காா்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ எச்எப்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை-400059, இந்தியா

கிளை அலுவலகம்: 2ஆவது தளம், கதவு எண். 20, கக்கன் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை-600045 [விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தார்ர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு, மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	ரகுமான் (கடன்தாரர்) மீரா பானு (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண். LHCTN00001326329	அலகு B, தரை மற்றும் முதல் தளம், மனை எண்.10&11, மேற்கு பகுதி, S.No.313/2A, 314/315/1, பட்டா எண்.5952 இன்படி புதிய S.No.313/33, ஸ்ரீ அம்பாள் நகர், காயரம்பேடு கிராமம், செங்கல்பட்டு வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம்	Rs. 54,59,402/- மே 16, 2024	Rs. 34,56, 000/- Rs. 3,45,600/-	ஜூலை 01, 2024 காலை 11.00 மணி - பிற்பகல் 03.00 மணி	ஜூலை 10, 2024 பிற்பகல் 02.00 மணி - 03.00 மணி
2.	ரகுமான் (கடன்தாரர்) மீரா பானு (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் LHCTN00001326333	அலகு C, தரை மற்றும் முதல் தளம், மனை எண்.10&11, மேற்கு பகுதி, S.No.313/2A, 314/315/1, பட்டா எண்.5952 இன்படி புதிய S.No.313/33, ஸ்ரீ அம்பாள் நகர், காயரம்பேடு கிராமம், செங்கல்பட்டு வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம்	Rs. 54,59,402/- மே 16, 2024	Rs. 34,56, 000/- Rs. 3,45,600/-	ஜூலை 01, 2024 காலை 11.00 மணி - பிற்பகல் 03.00 மணி	ஜூலை 10, 2024 பிற்பகல் 02.00 மணி - 03.00 மணி
3.	டார்லின் மரிய செல்வராஜ் (கடன்தாரர்), அமலோற்பவம் (உப-கடன்தாரர்), G விஜயலட்சுமி (ஜாமீன்தாரர்) கடன் கணக்கு எண் LHCTN00001351020	பிளாட் எண்.ஜி-1, தரைத்தளம், ஓம் சக்தி பிளாட்ஸ், மனை எண்.87, தேவகி நகர், சர்வே எண்.125 பகுதி மற்றும் 84/1, மணச்சேரி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை	Rs. 30,46,180/- மே 16, 2024	Rs. 25,23, 600/- Rs. 2,52,360/-	ஜூலை 01, 2024 காலை 11.00 மணி - பிற்பகல் 03.00 மணி	ஜூலை 10, 2024 பிற்பகல் 02.00 மணி - 03.00 மணி

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை **குளோப் டெக்** இணையதளத்தில் **(URL இணைப்பு- https://BestAuctionDeal.com)** நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு அறிவிப்பின் மூலம் **ஜூலை 09, 2024 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஜிசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2ஆவது தளம், கதவு எண். 20, கக்கன் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை-600045 என்ற இடத்தில் ஜூலை 09, 2024 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் E காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) தங்கள் ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்க ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்டப் பிரதியை **ஜிசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2ஆவது தளம், கதவு எண். 20, கக்கன் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை-600045** என்ற இடத்தில் **ஜூலை 09, 2024 மாலை 05.00** மணி அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **காஞ்சிபுரம், சென்னையில்** மாற்றத்தக்க வகையில் "ICICI Home Finance Company Ltd- Auction" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஜிசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை 9920807300** இல் அல்லது எங்கள் **விற்பனை & சந்தைப்படுத்தும் கூட்டுதாரர் நெக்ஸ்லென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்** உடன் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டுக் காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைக் கொண்டுள்ளார். விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க **https://www.icicihfc.com/**

நாள்: ஜூன் 03, 2024
இடம்: காஞ்சிபுரம், சென்னை

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஜிசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்